**பாரதி** தமிழ்பேரவை 2017-2018

கல்லூரி கல்வித்துறை அனுப்பிய சுற்றறிக்கையின் படி பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். நூற்றாண்டு விழா இலக்கியப்போட்டிகள் 16/8/17 அன்று நடைபெற்றன. பேச்சுப்போட்டி , கவிதைப்போட்டி , கட்டுரைப்போட்டி ஆகிய இம்மூன்று போட்டிகளையும் நடத்தி மாணவியரை மேல் நிலைக்கு கல்லூரி தமிழ்த்துறை அனுப்பியது.

பாரதி தமிழ்ப்பேரவை பேச்சு கவிதை சிறுகதை கட்டுரை போட்டிகளை அனைத்துத் துறைகளுக்கிடையே 30/8/2017,31/8/2017 ஆகிய இரு நாட்களில் நடத்தி மாணவியரைத் தேர்ந்தெடுத்து ஊக்கப்படுத்தினோம்.

## பாரதி தமிழ்ப்பேரவை

## 2017-18

## போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் விவரம்

| போட்டி | முதல்பரிசு | இரண்டாம்பரிசு | மூன்றாம்பரிசு |
|---|---|---|---|
| 1.கவிதை (எங்கெங்கு காணினும் சக்தியடா!) | மு.சங்கீதா<br>ஆங்கிலம்<br>இரண்டாமாண்டு | செ.ஐஸ்வர்யா<br>கணினி அறிவியல்<br>இரண்டாமாண்டு | கோ. ஜெயஸ்ரீ<br>இயற்பியல்<br>முதலாமாண்டு |
| 2.பேச்சு (இந்திய நாட்டின் பொருளாதார நிலை) | ர. வர்ஷா<br>இயற்பியல்<br>இரண்டாமாண்டு | தே.தேவதர்ஷினி<br>ஆங்கிலம்<br>இரண்டாமாண்டு | ரா.வாத்சல்ய வர்ஷா<br>பொருளாதாரம்<br>முதலாமாண்டு |
| 3.கட்டுரை (நதிநீர் இணைப்பு!) | தா. நிஷா<br>புள்ளியியல்<br>இரண்டாமாண்டு | செ.ஐஸ்வர்யா<br>கணிதம்<br>இரண்டாமாண்டு | சி.மோனிகா<br>புள்ளியியல்<br>இரண்டாமாண்டு |
| 4.சிறுகதை (உறவு) | இ.தமிழ்வாணி<br>கணிதம்<br>இரண்டாமாண்டு | சு.ஏஞ்சல்மோனிஷா<br>கணிதம்<br>முதலாமாண்டு | க.ஸ்ரீ.தக்ஷரா<br>ஆங்கிலம்<br>முதலாமாண்டு |

தமிழ்த்துறை சார்பில் 22/9/17 அன்று நடைபெற்ற சிறப்புச்சொற்பொழிவில் காயிதேமில்லத் அரசு கல்லூரி தமிழ் இணைப்பேராசிரியர் முனைவர் க. ஜோதிராணி அவர்கள் “**செவ்வியல் இலக்கியங்களில் அறம்**” என்னும் தலைப்பில் சிறப்புரை நல்கினார்.

தமிழ்த்துறை சார்பில் 12/10/17 அன்று நடைபெற்ற சிறப்புச்சொற்பொழிவில் பெரும்பாக்கம் அரசு கலைக்கல்லூரி உதவிப்பேராசிரியர் கவிஞர் இரா. பச்சியப்பன் அவர்கள் “**புதுக்கவிதைகளின் நோக்கும் போக்கும்**” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் பாரதரத்னா முனைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இராமேஸ்வரம் கலாம் இல்லத்திலிருந்து வந்த அறிவிப்பின்படி 13/10/2017 அன்று தமிழ்த்துறையில் பேச்சு, கட்டுரை, கவிதை, சிறுகதை, கதைச்சொல்லுதல், கடிதம் எழுதுதல் ஆகிய போட்டிகள் மாணவியருக்கு நடத்தப்பட்டு , பங்கேற்ற மாணவியர் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

சர்வோதைய தினமான ஜனவரி 30ம் தேதி காந்தி சத்திய சோதனைத் தேர்வு நடைபெற்றது. அதில் 50 மாணவியர் பங்கேற்றனர். 23 பேர் முதல் வகுப்பிலும், 17 பேர் இரண்டாம் வகுப்பிலும், 07 பேர் மூன்றாம் வகுப்பிலும் தேர்ச்சி பெற்றனர்.

மாணவர் கம்பன் கழகமும் ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக்கல்லூரி தமிழ்த்துறையும் இணைந்து 3/2/2018 அன்று சிறப்புச்சொற்பொழிவை ஏற்பாடு செய்திருந்தது. “**தமிழ் மரபும் உலகத்தொடர்பும்** ” குறித்து மலேசிய தமிழ் மரபு அறக்கட்டளையின் நிறுவனர் பேராசிரியர் முனைவர் நா. கண்ணன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தி மாணவியருடன் கலந்துரையாடினார்.

ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரியில் நடைப்பெற்ற “ஸ்மிருதி 2018” கலை விழாவில் தமிழ்த்துறை சார்பில் 14/2/18 அன்று நடந்த அனைத்து கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற தமிழ்க்கவிதைப் போட்டியில்,உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் முனைவர் மு.கோவிந்தராசு அவர்களும், முனைவர்மோ.வசந்தகுமார் அவர்களும் நடுவர்களாகப்பங்கேற்று விழாவினைச்சிறப்பித்தனர்.கவிதைப் போட்டியில் 17 கல்லூரிகளிலிருந்து மாணவ மாணவியர் பங்கேற்றனர். சர் தியாகராய கல்லூரி மாணவர் க.தினகரன் முதல் பரிசையும்,சென்னை செயின்ட் ஜோசப் கல்லூரி மாணவர்

எம்.யோகி இராண்டாம் பரிசையும்,லயோலோ கல்லூரி மாணவர் அருண்ஜேட்லி அவர்கள் மூன்றாம் பரிசையும் பெற்று விழாவிற்குப் பெருமை சேர்த்தனர்.

15/2/18 அன்று, **ஊடகங்கள் மக்களை நல்வழிப்படுத்துகிறதா? அல்லது திசை திருப்புகிறதா?** என்னும் தலைப்பில் அனைத்து கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற பேச்சுப்போட்டிக்கு அரும்பாக்கம் து. ஆல்பா கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் தமிழரசி கோதை மார்பன் அவர்களும் நடுவர்களாகப் பங்கேற்று விழாவினைச் சிறப்பித்தனர். பேச்சுப்போட்டியில் 26 கல்லூரிகளிலிருந்து மாணவ மாணவியர் பங்கேற்றனர்.சென்னை மீனாட்சி பொறியியல் கல்லூரி மாணவர் பி.ஐயப்பா முதல் பரிசையும் சென்னை செயின்ட் ஜோசப் கல்லூரி மாணவர் இனியன் இரண்டாம் பரிசையும் லயலோ கல்லூரி மாணவர் அருண் கோகுல் மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

21/0 2/2018 அன்று தேசிய சிந்தனைக்கழகமும் ஸ்ரீமதி தேவ் குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி தமிழ்த்துறையும், இணைந்து நடத்திய ‘‘சர்வதேச தாய்மொழி தின’’ கருத்தரங்கில் கல்லூரி முதல்வர் முனைவர். திருமதி வை. வரலட்சுமி அவர்கள் வரவேற்புரை வழங்க, தமிழ்த்துறைத்தலைவர் திருமதி. தி. செந்தமிழ்ச்செல்வி அவர்கள் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்ய, நம் கல்லூரியின் முன்னாள் மாணவியான டாக்டர். திருமதி சுதாசேஷய்யன் அவர்கள் சிறப்புரையாற்ற தேசிய சிந்தனைக்கழக செயலாளரான உயர்திரு. ம. கொ.சி. இராஜேந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

# முத்தமிழ் விழா

எமது கல்லூரி முத்தமிழ் விழா 1/3/2018 அன்று காலை 9.30 மணியளவில் கல்லூரி முதல்வர் முனைவர். திருமதி வை. வரலட்சுமி அவர்கள் வரவேற்புரை வழங்க, தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர். திருமதி. தி. செந்தமிழ்ச்செல்வி அவர்கள் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்ய, சிறப்பு விருந்தினர் அகில இந்திய வானொலி நிலைய முன்னாள் இயக்குநர் திருவாளர் "சேயோன்" அவர்கள் குத்து விளக்கு ஏற்ற விழா இனிதே தொடங்கியது.

சிறப்பு விருந்தினர் **கலைமாமணி சேவாரத்னா சேயோன் முனைவர் திரு. ந. முருகன்** உரையாற்றுகையில் "இயல் தமிழ்"என்ற தலைப்பில் சிறப்பாக உரையாற்றினார். இளமையில் மாணவியர் கல்விகற்கும் பொழுது ஈடுபாட்டுடனும் ஆர்வத்துடனும் இருக்க வேண்டும் என்று கூறினார். கல்வி கற்றதை பிறர் உணருமாறு எடுத்துரைக்க இயலாதவரை "இணர் ஊழ்த்தும் நாரா மலரனையர் கற்றது உணரா விடுத்து" என்ற திருக்குறளைக் கூறி விளக்கினார்.

அதைத் தொடர்ந்து "இசைத்தமிழ்" என்ற தலைப்பில் இராணிமேரி கல்லூரி, இசைத்துறை இணைப்பேராசிரியர் **முனைவர் இரா. அபிராமசுந்தரி** சிறப்புரையாற்றும் போது திருக்குறளை இசையோடு பாடினார். முகை வில்லிசைக் குழுவினரோடு நம் கல்லூரி மாணவியர் இணைந்து **பொன்விழா காணும் ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக்கல்லூரி** என்ற தலைப்பில் வில்லுப்பாட்டினைப் பாடினார். ஆதனைத் தொடர்ந்து ஆடிய கரகமும் பரதமும் முத்தமிழ் விழாவிற்கு மேலும் அணி சேர்த்தன.

நாடகப்பிரிவுக்குச் சிறப்பு விருந்தினராக அகில இந்திய வானொலி நிலைய முதுநிலை நாடகத்தயாரிப்பாளர் **கலையன்பன் திரு.கு. தட்சிணாமூர்த்தி** அவர்கள் நாடகத்தமிழ் என்ற தலைப்பில் உரையாற்றும் பொழுது நாடகக் கலைக்கு முகபாவம், குரல் வளம், உச்சரிப்பு இன்றியமையாதது என்பதை விளக்கினார். தமிழ்த்துறையின் சார்பில் "தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்ற நாடகத்தையும் சுயநிதிப்பிரிவின் சார்பில் "மணிமேகலை - பளிக்கறை புக்க காதை" என்ற நாடகமும் சிறப்பாக அரங்கேற்றினர்.

இந்த முத்தமிழ் விழா மாணவியர் பயன்பெறும் வகையில் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. வாழிய செந்தமிழ் மற்றும் நாட்டுபண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.